DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.210/21

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name பிரதீபா | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.01.23

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் அரண்மனைபுதூரில் குடியிருந்து வருகிறேன். நான் கல்லூரியில் படித்து வருகிறேன். 17.9.21 அன்று 6 மணியளவில் எனது தகப்பனார் முருகேசன் மில்லுக்கு கிளம்பினார். நான் வீட்டிலிருக்கும் போது 7.30 மணியளவில் எனக்கு ஒரு போன் வந்தது. போனில் முருகேசன் என்ன வேண்டும் என்று கேட்டு நான் எனது அப்பா என்று சொன்னவுடன் என் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், 108 ஆம்புலனஸில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாகவும் என்னை வரும்படியும் கூறினார். நான் உடனே நான் எனது பாட்டி, பக்கத்து வீட்டுகாரர் அனைவரும் சேர்ந்த கவிலக்கு மருத்துவமனைக்கு சென்றோம். எனக்கு போன் பண்ணி தகவல் சொன்னவருக்கு மீண்டும் போன் பண்ணி என் அப்பா மருத்துவமனையில் எங்கு இருக்கிறார் என கேட்டு தெரிந்துக்கொண்டேன். அவர் வந்து என்னை பார்த்தவுடன் நான் அவர் பெயர் கேட்டபோது அவர் பெயர் அருண்ராஜா என்று சொன்னார். அவரிடம் எனது அப்பாவிற்கு எப்படி விபத்து ஏற்பட்டது என்று கேட்டபோது என் அப்பா தேனி ஸ்போர்ட்ஸ் கிளப் அருகே மேற்கிலிருந்து கிழக்கு பக்கமாக ரோட்டை கடக்கும் போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த கிரோகோண்ட சிடி 110 என்ற வண்டி அதிகவேகமாகவும், கவனிக்காமலும் வந்து என் அப்பா மீது மோதிவிட்டதாக சொன்னார். அதற்கு பிறகு எனது அப்பாவை பார்த்து மருத்துவரிடம் என் அப்பா எப்படி இருக்கிறார் என்று கேட்டபோது என் அப்பாவிற்கு பின்னந்தலையிலும், வலது பக்க தோள்பட்டையிலும் இடது மணிக்கட்டிலும் அடிபட்டு இருப்பதாக கூறினார். அன்றிரவே எனது தகப்பனார் சிகிச்சையிலிருக்கும் போது இறந்துவிட்டார். இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். எதிரியை தெரியும். பார்த்திருக்கிறேன். எதிரி தான் என் தகப்பானாருக்கு விபத்தை ஏற்படுத்தியவர். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி ஆஜர் எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.